இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 23-09-2025

வெளியுறவுக் கொள்கையின் தோல்வி!

அமெரிக்காவில் இருந்து வரும் செய்திகள் அனைத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வெளியுறவுக் கொள்கை தோற்று வருவதையே உணர்த்துகின்றன.

வாரம்தோறும் ஏதாவது ஒரு வெளிநாட்டில்தான் இந்தியப் பிரதமர் மோடி இருக்கிறார். உள்நாட்டைத்தான் கவனிக்கவில்லை, வெளிநாடுகளில் ஆவது இந்தியப் பெருமையை நிலைநாட்டுவார் என்று நம்பினோம். ஆனால் அதிலும் மண்தான் விழுந்துள்ளது.

அதிலும் குறிப்பாக அமெரிக்க அதிபர் டிரம்ப், நமது பிரதமர் மோடியின் நட்பானது மிகக் கெட்டியானதாக இருந்தது. இவர் வெற்றிக்கு அவரும், அவர் வெற்றிக்கு இவரும் உழைத்தார்கள். உருகினார்கள். பிணைந்தார்கள். இருவருமே ஒருவர்தான் என்று காட்டிக் கொண்டார்கள். இறுதியாகப் பார்த்தால், இந்தியாவின் மீது எல்லாவகையிலும் தாக்குதல் நடத்துவதை தனது ஹாபியாக மாற்றிக் கொண்டு விட்டார் அமெரிக்க அதிபர் டிரம்ப்.

முதலில் இந்தியாவுக்கு வரிச்சுமையை அதிகப்படுத்தினார். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு முதலில் 25 விழுக்காடு வரியை அதிகப்படுத்தினார். பின்னர், கூடுதலாக 25 விழுக்காடு வரியை அதிகரித்துள்ளார். இதன் காரணமாக அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் இந்தியப் பொருட்களுக்கு 50 விழுக்காடு வரி இனி செலுத்த வேண்டும்.

அடுத்ததாக இந்தியாவைப் பற்றி மோசமான பிம்பத்தை உருவாக்கினார் டிரம்ப். “அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள ‘மோசமான நாடுகளில்’ ஒன்று” என்று இந்தியாவைப் பட்டியலிட்டார் டிரம்ப்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாகக் குடியேறினார்கள் என்று சொல்லி பலரையும் கைது செய்து இந்தியாவுக்கு நாடு கடத்தினார்கள். அதில் கொடுமையானது, அவர்கள் கைவிலங்கு போட்டு அனுப்பப்பட்டதாக காட்சிகள் வெளியானது.

பின்னர், அமெரிக்காவுக்கு படிக்க வரும் மாணவர்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைக்கச் சொன்னார் டிரம்ப். அதன்படி மாணவர் விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விசா கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கும்படி அந்த நாட்டு வெளியுறவுத் துறை உத்தரவு போட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் மோதலின் போது டிரம்ப் சொன்ன வாக்கு மூலங்கள் இந்தியாவின் மதிப்பைக் குறைப்பதாகவும், ‘எனது பேச்சைக் கேட்டுத் தலையாட்டும் நாடு இந்தியா’ என்பதைச் சொல்வதாகவும் அமைந்திருந்தன. ‘நான் சொன்னதால்தான் போர் நிறுத்தப்பட்டது’ என்று 26 முறை சொல்லி இருக்கிறார் டிரம்ப்.

இந்த வரிசையில் உச்சகட்டமாக, ஹெச் 1 பி விசா கட்டணம் 88 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 88 லட்சம் செலுத்த வேண்டும். இதனால் அமெரிக்காவில் பணிபுரியும் இந்தியர்கள் பெரும் பாதிப்பை அடைவார்கள். வெளிநாட்டவரை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் 1.75 லட்சம் முதல் 4.50 லட்சம் வரை கட்டணமாக இதுவரை செலுத்தி வருகிறது. இதைத்தான் 88 லட்சமாக ஆக்கிவிட்டார் டிரம்ப்.

‘அமெரிக்க வேலை வாய்ப்புகளை வெளிநாட்டவர் திருடுகிறார்கள்’ என்பதால் இந்த நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது. அமெரிக்கத் தொழிலாளர்களது நன்மைக்காக வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான விசா கட்டணத்தை அதிகரித்ததாக பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டதை ஒரே ஒருமுறை செலுத்தினால் போதும் என்று விளக்கம் அளித்துள்ளார்கள்.

அமெரிக்காவில் வழங்கப்படும் ஹெச் 1 பி விசாக்களில் ஐந்தில் ஒரு பங்கை இந்தியர்களே பெற்று வந்தார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் இப்படி வழங்கப்படும் விசாக்களில் 70 விழுக்காடு விசாக்களை இந்தியர்களே பெற்று வருவதாகவும் சொல்லப்படுகிறது. டிரம்பின் அறிவிப்புக்குப் பிறகு, ஹெச் 1பி விசா வைத்திருக்கும் அனைவரையும் உடனடியாக நாடு திரும்ப அறிவித்துள்ளார்கள். விடுமுறைக்காக சொந்த நாடுகளுக்குச் சென்றிருந்தால் அவர்கள் உடனடியாக அமெரிக்கா சென்றாக வேண்டும்.

அமேசான், டாடா கன்சல்டன்சி, மைக்ரோசாப்ட், மெட்டா, ஆப்பிள், கூகுள், டெலாய்ட், இன்போசிஸ், விப்ரோ, மகேந்திரா ஆகிய முக்கியமான, பெரிய நிறுவனங்கள் அனைத்திலும் ஹெச் 1பி விசா வாங்கிய தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம். தொழிலாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது டிரம்ப் அறிவிப்பு.

‘இந்த அறிவிப்பு இந்திய தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும்’ என்று தேசிய மென்பொருள், சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான ‘நாஸ்காம்’ அறிவித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் இருந்து ஆக்ஷனும் இல்லை, ரியாக்ஷனும் இல்லை. ‘இதைப் பற்றி ஆய்வு செய்வோம்’ என்று இந்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் சொல்லி இருக்கிறார். ‘இருநாட்டு மக்கள் தொடர்பு முக்கியமானது. இதனை கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்’ என்று அருள் பாலித்திருக்கிறார் அவர். இதெல்லாம் அதிபர் டிரம்புக்குப் புரியுமா? புரியாது. இவ்வளவு தான் மோடி ஆட்சியால் முடியும்.

இந்தியர்களின் நலனைக் காக்கும் வெளியுறவுக் கொள்கையில் மோடி அரசு தோல்வி அடைந்துவிட்டதையே இது காட்டுகிறது. இந்திய, இந்தியர் நலன்களுக்கு அக்கறையில்லாத பிரதமர் மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால் என்ன பயன்?

மன்மோகன் சிங்கை, ‘பலவீனமான பிரதமர்’ என்று எப்போதும் கிண்டல் அடிப்பார் மோடி. ‘பலமான பிரதமர்’ என்று சொல்லிக் கொண்டவர் அல்ல மன்மோகன். ஆனால், ‘உலகத்தை ஆளும் விஸ்வகுரு’வாக உருவகப்படுத்தப்படும் மோடியின் பிம்பம் உள்நாட்டைப் போலவே வெளிநாட்டிலும் பலவீனமானதுதான் என்பதையே அமெரிக்க அறிவிப்புகள் சொல்கின்றன.

●●

திருவண்ணாமலையில் – ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்புக் கூட்டம்!

தமிழர்களின் மொழி, பண்பாட்டைக் காக்கும் இரும்பு மனிதர் மு.க.ஸ்டாலின்!

அமைச்சர் எ.வ.வேலு பேச்சு! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப்.23-

சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டை காத்த இரும்பு மனிதர் ஜோசப் ஸ்டாலின், தமிழர்களின் மண், மொழி, மானத்தை காக்கும் இரும்பு மனிதர் முதல்வர் மு.க. ஸ்டாலின் என்று, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மானயேற்பு, மாபெரும் பொதுக்கூட்டத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

இதில் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

திருவண்ணாமலை மாநகரம், திருவள்ளுவர் சிலை அருகில், 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு தீர்மானமேற்பு, மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு, கழக கொள்கை பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

அமைச்சர் எ.வ.வேலு ஆற்றிய உரை வருமாறு:-

ஒரு மனிதன் பண்படக் கல்வி அவசியம், தமிழ்நாட்டில் அரசு சார்ந்து 22 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் 18 பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்கள் இல்லை. துணை வேந்தர்கள் நியமிக்கப்படாமலிருப்பதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் பாஜகவின் ஏஜெண்டான தமிழ்நாட்டு ஆளுநர் ரவி தான் காரணம். இப்படியிருந்தால் கல்வித்தரத்தை எப்படி உயர்த்தமுடியும். தமிழ்நாட்டில் படிப்பவர்கள் மிகுந்த அறிவாளிகள். அமெரிக்க நாட்டையே ஆட்டிப்படைக்கும் கூகுல் சுந்தர் பிச்சை ஒரு தமிழர்தான். அறிவில் சிறந்த நாடு தமிழ்நாடு.

வஞ்சிக்கும் மோடி அரசு!

வடஇந்தியாவில் புயல் வந்தால், ஓடோடிச் சென்று, நிதிவழங்கும் ஒன்றிய மோடி அரசு, தமிழ்நாட்டில் 100 திட்டம், வர்த்த, பெஞ்சால் புயல் உள்ளிட்ட எந்த புயல் பேரிடருக்கும் நிவாரணம் வழங்காமல் வஞ்சிக்கிறது ஒன்றிய மோடி அரசு.

பச்சைத் துண்டை போட்டுக் கொண்டிருப்பதால், பச்சைத் தமிழராகிவிட்ட எடப்பாடி பழனிச்சாமி, தமிழ்நாட்டில் போகிற இடத்திலெல்லாம் திமுக அரசு கடன் வாங்கி வருவதாக குற்றஞ்சாட்டுகிறார். எடப்பாடி அதிமுக அரசின் பதவி காலம் முடிந்ததும், கழக அரசு பொறுப்பேற்றபோது, ரூபாய் 4லட்சத்து 56ஆயிரத்து 660கோடித் தொகையை கடன் இருந்தது. அதற்கு ஓராண்டிற்கு ரூபாய். 37ஆயிரத்து 581கோடி ரூபாய் வட்டி என்றும், ஆக ஐந்தாண்டுகளில் ரூபாய்.1லட்சத்து 87ஆயிரத்து 95ஆயிரம் கோடித் தொகைக்கு வட்டி மட்டும் வந்துள்ளது. அசல் மற்றும் வட்டி ஆகிய இரண்டையும் சேர்த்தால் அதிமுக எடப்பாடி அரசு வைத்துவிட்டு சென்ற கடனுக்கு இதுவரை ரூபாய் 6லட்சத்து 44ஆயிரத்து 565 கோடித் தொகை வந்துள்ளது.

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் கடன் தள்ளுபடி, மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மாணவர்களின் காலை உணவுத் திட்டம், ஆதரவற்ற குழந்தைகளின் அன்புக் கரங்கள் உள்ளிட்ட எண்ணற்றத் திட்டங்களுக்காக 5 ஆண்டுகளில் 2லட்சத்து 85ஆயிரத்து 394கோடி ரூபாய் மட்டுமே கடன் பெற்றுள்ளது திராவிட மாடல் அரசு. அதிமுக எடப்பாடி அரசுபோல், ஊதாரித் தனமாக செலவு செய்வதற்காக கடன் பெறவில்லை.

ஆனால், தமிழ்நாடு முழுவதும் பொய் பேசுவதற்காகவே சுற்றுப்பயணம் செய்யும் எடப்பாடி பழனிச்சாமி, மொத்தக்கடனையும், நமது கழகதான் அரசு தான் வாங்கியதாக மக்களிடம் நாளொரு பொழுது, பொழுதொரு வண்ணம் பொய்பேசி வருகிறார். எடப்பாடி அரசு வாங்கியக் கடதான், தற்போது தமிழ்நாட்டின் கடன் அளவை அதிகரிக்க வைத்திருக்கிறது.

மனிதாபிமான இதயம், தாயுள்ளம் இருப்பதால்தான், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்புக் கரங்கள் உள்ளிட்ட புதியப் புதிய திட்டங்களை மக்களுக்காக செய்து வருகிறார். இதற்காகத்தான் 5 ஆண்டுகளில் ஏழை, எளிய மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும், மாற்றுத்திறனாளிகளுக்காகவும் மட்டுமே திராவிட மாடல் அரசு 2லட்சத்து 85ஆயிரத்து 394கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது.

எடப்பாடியின் பொய்ப் பிரச்சாரம்!

அ.தி.மு.க. எடப்பாடி ஆட்சிக்காலத்தில் 11 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக பச்சைப் பொய்யைச் சொல்லும் எடப்பாடி பழனிச்சாமி, அனுமதி கொடுத்தவர்களுடன் பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டார். ஆனால் அந்த 11 மருத்துவக் கல்லூரிக்காக தற்போது திராவிட மாடல் அரசு 2426கோடி ரூபாய், அதாவது நமது அரசுதான் 74 சதவீதம் செலவு செய்திருக்கிறது.

வருவாய்த் துறை, பள்ளிக் கல்வித் துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட பல் வேறு துறைக்களுக்காக 5 ஆண்டுகளில் 33ஆயிரத்து, 417கோடி ரூபாய் கழக அரசு செலவு செய்திருக்கிறது. அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி அரசு திட்டங்களை அறிவித்து விட்டு சென்றுவிட்டார். அறிவித்ததையும் சேர்த்து கழக அரசுதான் செலவு செய்ததால்தான் கடன் அளவு உயர்ந்திருக்கிறது.

திராவிட மாடல் அரசை கடனாளியாக்கியது எடப்பாடிதான், ஆனால் மக்களை ஏமாற்றும் நோக்கில் இது போன்ற சுற்றுப்பயணத்தில் திமுக அரசுதான் கடன் வாங்கியது போல பொய்ப்பிரச்சாரம் செய்து வருகிறார் எடப்பாடி பழனிச்சாமி.

தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தைக் காத்திட, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில்தமிழ்நாடு தீர்மானயேற்பு பொதுக்கூட்டம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனங்களின் மொழி, பண்பாட்டை காத்தவர் இரும்பு மனிதர் ஜோசப் ஸ்டாலின், தமிழர்களின் மொழி, இனம், பண்பாட்டை காத்துவருபவர், தமிழ்நாட்டின் இரும்பு மனிதர் நமது முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்.

தி.மு.க., என்ற இயக்கம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், எந்த கொம்பனாலும் அசைத்து பார்க்கமுடியாது, இனியும் எவனும் பிறக்க முடியாது, நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான்கள் எல்லாம், எத்தனை வந்தாலும், எஃகுக் கோட்டையாம் திமுகவை அழிக்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார்.

முன்னதாக, தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன், ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழியை அமைச்சர் எ.வ.வேலு வாசிக்க, அனைவரும் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

பின்னர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு, கழக கொள்கைப்பரப்பு செயலாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் சால்வை அணித்து, நினைவு பரிசுகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.செளந்தரராசன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ. ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக் பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர். பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் அ.சி வக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், மெய்யூர்.ந.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், சி.மாரி முத்து, ப.கேசவன், கோ.ரமேஷ், எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோ கரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன், பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபானி, க.பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, பா.முருகையன், எம். சீனுவாசன், திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார் மற்றும் மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், கிளை, வட்டக் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதி கள் மற்றும் கழக முன்னோடிகள் உட்பட பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ப.கார்த்தி வேல்மாறன் நன்றி கூறினார்.

முன்னதாக மாவட்ட தி.மு.க. கலைக்குழு மு.அம்பேத்கர் வழங்கும் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கிராமப்புறங்களில் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி,

பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்களுக்கு வங்கிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்!

ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை, செப்.23-

MSME துறையின் மூலம் செயல்படுத்தப்படும் சுயவேலைவாய்ப்பு திட்டங்களில் கிராமப்புரங்களில் சுயவேலை வாய்பை உருவாக்கி பொருளாதாரத்தை உயர்த்தும் திட்டங்களான பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டங்களில் வங்கிகளின் செயல்பாடு குறித்த ஆய்வு கூட்டம் நேற்று (22.9.2025) சென்னை. கிண்டி சிட்கோ அலுவலக வளாகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசும் போது “பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைபடுத்தும் திட்டம், விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைத்திட, அவற்றை மதிப்பு கூட்டப்பட்ட உணவு பொருட்களை தயாரிக்க செயல்படுத்தப் படுகிறது. இது மிகவும் முக்கியமான திட்டமாகும்.

கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் தொழிற்சாலைகளை கொண்டு வரவும், இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தவும், இந்த திட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட 4 ஆண்டுகளில். 15,023 தொழில்முனைவோர்களுக்கு ரூ.326.74 கோடி மானியத்துடன் ரூ.854.53கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. அதுபோல், அனைத்து கைவினை கலைஞர்களையும் உள்ளடக்கிய, கைவினை கலைஞர்களை பொருளாதார ரீதியாக உயர்த்தவும், கலைகளை அழியாமல் பாதுகாக்கவும், கிராமப்புறங்களில் குறுந்தொழில்களை தொடங்கவும் செயல்படுத்தப்பட்ட கலைஞர் கைவினை திட்டத்தில் இது வரை 4950 நபர்களுக்கு ரூ17.71 கோடி மானியத்துடன் ரூ.83.66 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

கலந்தாலோசனைக் கூட்டம்!

இந்த 2 திட்டங்களும் கிராமப்புற பொருளாதரம் மற்றும் வேலைவாய்பை உயர்த்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மிகசிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் இந்த திட்டங்களில் கடந்த 6 மாதங்களில் தேசிய மற்றும் தனியார் வங்கிகளில் கடன் உதவி வழங்குவது தொய்வு ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கலந்தலோசிக்க வங்கிகளின் தலைமைச் செயல் அலுவலர்கள் மற்றம் தலைமை பொது மேலாளர்களுடனும், காணொலி வாயிலாக வங்கிகளின் மாவட்ட பொது மேமலாளர்கள், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

குறு தொழில்கள் செய்யும் தொழில்முனைவோர்களுக்காக செயல்படுதப்படும் இந்த திட்டத்தில் அரசின் மானியங்கள் முறையாக வழங்கப்படும் போது, அதற்கு இணையாக வங்கிகளும் கடன்களை உடனுக்குடன் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். அரசு துறைகளும், வங்கிகளும் இணைந்து செயல்பட்டால் தான் ஒரு திட்டம் வெற்றியடையும்.

எனவே, பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு விரைந்து ஒப்புதல் வழங்கி, கடன் உதவிகளை உடனுக்குடன் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டத்தில் கலந்துக் கொண்டுள்ள வங்கி உயர் அலுவலர்கள், தங்கள் ஆய்வு கூட்டங்களில் இந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

சிபில் ஸ்கோர் இல்லை என்று பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகிறது. முதல் முறை கடன் பெறுபவர்களுக்கு சிபில் ஸ்கோர் பார்க்கத் தேவை இல்லை என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. அதனை வங்கி மேலாளர்கள் நடைமுறைபடுத்த வேண்டும். சிபில் ஸ்கோர் சிறிது குறைவாக இருந்தாலும், எதற்காக அது குறைந்துள்ளது என்பதை பார்த்து கருணை அடிப்படையில் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து ஒப்புதல் வழங்க வேண்டும்.

பயனாளிகள் அளிக்க வேண்டிய ஆவணங்கள் சரியாக இல்லை என்றாலோ, பயனாளி தொழில் தொடங்க விருப்பம் இல்லை என்று தெரிவித்தாலோ, விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு பதிலாக மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களுடன் ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது. வங்கிகள் விதிமுறைகளை கடுமையாக பின்பற்றாமல் பெண்களுக்கு உதவிடும் வகையில், கிராமபுற பொருளாதாரத்தினை உயர்த்திட விரைந்து கடன் உதவிகளை வழங்க வேண்டும், இந்த மூன்று திட்டங்களும் நாட்டின் கிராமப்புற பொருளாதாரத்தை சார்ந்து உள்ளதால், வங்கி உயர் அலுவலர்கள் இதில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் MSME துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் அதுல் ஆனந்த், தொழில் வணிகத் துறை ஆணையர் நிர்மல்ராஜ், தேசிய தனியார் வங்கிகளின் தலைமை செயல் அலுவலர்கள், பொது மேலாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் என முழக்கமிட்டு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். உடன் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் ஆர். காந்தி, சி.வி.எம். பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ப.அப்துல் மாலிக், சி.கே.வி.தமிழ்ச்செல்வன், சன்பிராண்ட். கே.ஆறுமுகம், மேயர் மகாலட்சுமி யுவராஜ், கே.திலகர் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்